## எவ்வாறு முறையீடு செய்வது

**அப்படியென்றால் சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவரிடம் நான் எவ்வாறு முறையீடு செய்வது?**

இந்த **மூன்று இலகுவான வழிகளைப்** பின்பற்றவும்

1. நீங்கள் முதலில் குடிவரவு அகற்றுதல் மையத்தின் முறையீடுகள் செயல்முறையை முழுவதுமாகத் தெரிந்துகொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. உங்கள் முறையீடு எதைப் பற்றியது மற்றும் உங்களுக்கு ஏன் இன்னும் திருப்தி இல்லை என்பவற்றை எங்களிடம் கூறும் ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.
3. குடிவரவு அகற்றுதல் மையத்தின் அனைத்து முறையீட்டுப் படிவங்கள் உட்பட - உங்களின் அனைத்து ஆவணங்களின் பிரதிகளையும் எங்களுக்கு அனுப்பவும்.

**இதைப் பல மொழிகளில் மொழிபெயர்த்துள்ளோம். உங்கள் மொழியில் துண்டுப் பிரசுரம் ஒன்று கிடைக்கவில்லை என்றால், எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

## உங்கள் முறையீட்டை எங்கே அனுப்புவது

**எனது அனைத்து ஆவணங்களையும் நான் எங்கே அனுப்புவது?**

உங்களின் அனைத்து முறையீட்டு ஆவணங்களின் பிரதிகளையும் இந்த முகவரிக்கு அனுப்பவும்:


Prisons and Probation Ombudsman
Third Floor, 10 South Colonnade
Canary Wharf, London
E14 4PU

சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவருக்கு உங்கள் கடிதங்களை **இலவசமாக**. அனுப்பலாம். உங்கள் கடிதங்களுக்கான அஞ்சல் கட்டணம் குடிவரவு அகற்றுதல் மையத்தினால் (IRC) செலுத்தப்படும்

**நினைவில் கொள்ளுங்கள்**, அசல் ஆவணங்களை எங்களால் திருப்பி அனுப்ப முடியாது என்பதால், அவற்றை எங்களுக்கு அனுப்ப வேண்டாம்.

Prisons & Probation Ombudsman
Independent Investigations

# சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவருக்கு (ஓம்பட்ஸ்மன்) எவ்வாறு முறையீடு செய்வது



**நீங்கள் முறையீடு ஒன்றைச் செய்துள்ளீர்களா, உங்களுக்கு இன்னும் திருப்தி இல்லையா?**

நீங்கள் சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவருடன் பேசவேண்டியிருக்கலாம்.

Fixed_6.7451_PPO_Stg3-updates_Complaints_DL-lflt_IRC_v6_tam.indd 1-3 17/02/2022 14:28:45

## உங்களுக்குத் தெரியுமா?

- ஒவ்வோர் ஆண்டும், **தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களின் முறையீடுகள் உட்பட, ஆயிரக்கணக்கான** முறையீடுகளை சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவர் பெறுகிறார்.
- இந்த முறையீடுகளுக்குப் பிரதியுத்தாரமாக , நாங்கள் **குடிவரவு அகற்றுதல் மையங்களுக்கு பரிந்துரைகளை** செய்கிறோம். மேலும் எங்கள் விசாரணைகளின் முடிவுகள், குடிவரவுக் காவலை **நியாயமான, பாதுகாப்பான இடமாக** தடுப்புக் கைதிகளுக்கு நாடு முழுவதும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**ஓர் உடைமையை இழந்துவிட்டீர்களா? நீங்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாக நினைக்கிறீர்களா? சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவரைத் தொடர்பு கொள்ளவும்.**

## சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவர் பற்றிய உண்மை

- நாங்கள் உள்துறை அலுவலகம் அல்லது குடியேற்றக் கொள்கை நிறைவேற்ற அமைப்புக்காக பணியாற்றுபவர்கள் அல்ல. சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவர் **முற்றிலும் சுயாதீனமானவர்**.
- நீங்கள் எங்களுக்கு அனுப்பும் கடிதங்கள் **குடிவரவு அகற்றுதல் மையத்தினால்`(IRC) வாசிக்கப்படமாட்டா**. மேலும் அவை உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படமாட்டா. எங்களிடம் முறையீடு செய்வதால் நீங்கள் எந்த பிரச்சினையிலும் சிக்க மாட்டீர்கள்.
- ஒவ்வோர் ஆண்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களிடமிருந்து முறையீடுகளைப் பெறுகிறோம். **எங்களால் உங்களுக்கும் உதவ முடியும்.**
- நாங்கள் உங்களுடன் உடன்பட்டால், உங்களிடம் **மன்னிப்பு கோரப்படலாம்; உங்கள் இழப்பு ஈடுசெய்யப்படலாம்; மையம் செயல்படும் விதத்தில் மாற்றம் கூட ஏற்படுத்தப்படலாம்.**
- உங்கள் முறையீட்டைப் பெற்ற **10 நாட்களுக்குள்** நாங்கள் அதை விசாரிக்க முடியுமா என்பதை உங்களுக்குத் தெரிவிப்போம்.

## நீங்கள் எதைப் பற்றி முறையீடு செய்யலாம்?

**சரி, நான் எதைப் பற்றி முறையீடு செய்யலாம்?**

**ஊழியர்கள் உங்களை நடத்தும் விதம், உங்கள் இழந்த சொத்துக்கள் அல்லது சிறைகள், தடுப்பு மையங்கள் அல்லது உங்கள் சொந்த நாட்டிற்கு இடையேயான போக்குவரத்து போன்ற அனைத்து வகையான பிரச்சினைகள் பற்றியும் நீங்கள் சிறைகள் மற்றும் நன்னடத்தை முறைமன்ற நடுவரிடம் முறையீடு செய்யலாம்.**

எங்களால் விசாரிக்க முடியாதவை:

- குடிவரவு வழக்குகள் பற்றிய முறையீடுகள் அல்லது முடிவுகள்.
- மருத்துவ பராமரிப்பு பற்றிய முறையீடுகள்.
- பொது விதியாக, உங்கள் மூலமுறையீடு குறித்து குடிவரவு அகற்றுதல் மையத்திலிருந்து இறுதிப் பதில் வந்து 3 மாதங்களுக்கும் மேலாக இருந்தால்.
- முறையீடு, உங்களுக்கு நேர்ந்த ஒரு சம்பவம் பற்றியதாக இருக்க வேண்டும், வேறொருவருக்கு அல்ல
- நீங்கள் அதே பிரச்சினையில் சட்டபூர்வ வழக்கு ஒன்றைத் தொடுப்பதானால் அல்லது ஏற்கனவே தொடர்ந்திருந்தால்